

யாழ்ப்பாணம் கரணவாயைப் பிறப்பிடமாகவும்
திருகோணமலை உவர்மலையை வசிப்பிடமாகவும்
கொண்ட

# அமரர். திரு. கணபதிப்பிள்ளை நாகலிங்கம்

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர். திரு. கணபதிப்பிள்ளை நாகலிங்கம்

அவர்களின்

## 31வது நினைவு நாளை முன்னிட்டு

அன்னாரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கும்

## நினைவு மலர்

03.05.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பத்தினரின் சமர்ப்பணம்

குடும்பத்தின் மூலமே
தழும்பாத பாசமே
பார் பலரும் போற்றிவரும்
பணிவான எம் நேசமே

பற்றுக்கும் குறைவில்லை
பார்ப்போர் ஈர்ப்புக்கும் குறைவில்லை
மட்டிலா மனங்கொண்ட
மலை போன்ற மாணிக்கமே

ஒப்படைத்தோம் வார்த்தையிலே
ஒப்பில்லா உமதன்பை
ஏற்றிடுவீர் எம்மவரின்
உண்மையான சமர்ப்பணத்தை.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கம் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகந்தனைக்
காதலான் கூப்புவார்தம் கை

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பக கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேலுன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறனைப் பெரு வாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற்குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்தினிபாதா
வெற்றி வேலாயுத பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாணம் வடமாராட்சிப் பிரதேசத்தின் கரணவாய் தெற்கில் வாழ்ந்த கணபதிப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை தம்பதியருக்கு 30.11.1938 இல் ஐந்தாவது பிள்ளையாக பிறந்து, வீட்டில் அன்பாக மகாலிங்கம் எனும் பெயரையும் பதிவுப் பெயராக நாகலிங்கம் என்ற பெயரையும் பெற்றிருந்தார்.

அன்பை என்றும் அள்ளி வழங்கிய சகோதரர்களாக வள்ளியம்மா, கந்தசாமி, இராசம்மா, பொன்னுச்சாமி, பரமசாமி ஆகியோர் கிடைக்கப் பெற்றார்.

ஆரம்ப பள்ளிப் படிப்பை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், தனது உயர் கல்வியை திருகோணமலையில் வசித்த மூத்த அண்ணர் அமரர் க. கந்தசாமி அவர்களுடன் தங்கியிருந்து தி/ புனித சூசையப்பர் கல்லூரியிலும் மேற்கொண்டிருந்தார்.

தனது முதல் வேலைவாய்ப்பை திருமலையில் இயங்கி வந்த வடிவேல் பிரதரஸ் கம்பனியில் எழுதுவினைஞராக பெற்றுக்கொண்டதோடு பின்னர் இலங்கை துறைமுக அதிகாரசபையில் எழுதுவினைஞராகவும், தலைமை எழுதுவினைஞராகவும் பணியைத் தொடர்ந்திருந்தார்.

தனது இருபத்தைந்தாவது வயதில், யாழ்ப்பாணம் மயிலிட்டியைச் சேர்ந்த செல்வரட்ணம் மகேஸ்வரியம்மா தம்பதியினரின் மூன்றாவது பிள்ளையான இன்பமலர் என்பவரை அனைவரினதும் ஆசீர்வாதங்களுடன் 09.02.1963 அன்று வாழ்க்கைத் துணையாக கரம் பிடித்தார். சுந்தரலிங்கம் என்பவரை மைத்துனராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயமலர், தேம்பாமலர், இரஞ்சிதமலர், புனிதமலர் ஆகியோரை மைத்துனிகளாகவும் பெற்றார்.

தன்னுடைய குடும்ப வாழ்க்கையை திருமலையின் சிவன்கோவிலடியில் அன்பான அயலவர்களின் சூழலில் வாடகை வீடு ஒன்றில் இன்பமாக ஆரம்பித்தார். 1964 இல் அருமை பெருமையாக தலைமகனை பெற்று தனது பெயரில் பாதியை இணைத்து இரட்ணலிங்கம் என்று பெயர் சூட்டி செல்வச் செழிப்புடன் பிறந்ததால் செல்வம் என்று கூப்பிட்டு வளர்த்தார்.

1968 இல் உவர்மலையில் காணி பெற்று, பற்றைக் காடுகளைத் துப்புரவு செய்து சொந்தமாக வீடு கட்டி குடியேறினார்.

1970 இல் தனது பெயர் சொல்ல இரண்டாவது செல்ல மகனாக றமணலிங்கத்தையும் பெற்று ஆசையாக வீட்டில் கூப்பிட சுரேஷ் என்றும் பெயர் வைத்தார்.

நான்கு வருடங்களின் பின் 1974 இல் மூன்றாவதாக பிறந்த ஆசை மகனுக்கு ஜெயலிங்கம் என்று பெயரிட்டு வாழ்க்கையில் எல்லாம் வெற்றிகரமாக அமைய வேண்டுமென்று அவரை ஜெயம் என்று கூப்பிட்டு மகிழ்ந்தார்.

தவமாய் தவமிருந்ததன் பலனாக 1979 இல், மூன்று ஆண் பிள்ளைகளுக்கு பிறகு தனது செல்ல மகளைப் பெற்று இன்பதர்ஷினி என்று பெயரிட்டு, தங்களுக்கு தங்கமாக கிடைத்ததால் தங்கா என்று செல்லமாக கூப்பிட்டு ஆனந்தமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998 இல் தனது பணியில் இருந்து ஒய்வு பெற்று அடுத்த கட்ட வாழ்க்கை முறையை வாழ ஆரம்பித்தார்.

அவர் மனம்போலவே அவரிற்கு அன்பான மனைவியும், மக்களும், மருமக்களும், பேரப்பிள்ளைகளையும் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்தார். அன்பான பேரப்பிள்ளைகளுடன் எப்போதுமே படிப்பு, விளையாட்டு, பொது அறிவு என்று எதுவானலும் கலகலப்பாக கதைத்தும், விளையாடியும் ஆனந்தமடைந்தார். பேரப்பிள்ளைகள் விரும்பிக் கேட்கும் பொருட்களை இலங்கையிலிருந்து அனுப்பி வைத்து சந்தோஷப்பட்டார்.

தனது பிள்ளைகளின் அன்பான அழைப்பில் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, இலண்டன் எனப் பல நாடுகளுக்கும் தன் துணையுடன் சென்று தன் பிள்ளைகளின் வாழ்க்கை முறையை நேரில் கண்டு அனுபவித்து மனமகிழ்ந்து கொண்டார்.

2013 ஆம் ஆண்டு தனது 50 வது திருமண ஆண்டு நிறைவு நாளை மனைவியுடன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர் அனைவரும் சூழ்ந்திருக்க வெகு விமரிசையாக கொண்டாடி மகிழ்ந்தார்கள். 2018 இல் தனது 80 வது பிறந்தநாளை இலண்டனில் மகளின் குடும்பத்துடனும், சொந்த பந்தங்களுடனும் இனிதே கொண்டாடினார்.

2019 இல் வெகுவிமரிசையாக நடந்த தனது மூத்த பேத்தியின் பூப்புனித நீராட்டு விழாவில் குடும்பத்தினருடனும் உற்றார் உறவினருடனும் மிக மகிழ்ச்சியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துகொண்டார்.

வாசிகசாலைக்கு செல்வதையும், வீட்டுக்கு அருகாமையில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு தினமும் சென்று தொண்டுகள் புரிவதையும் வழமையாக்கிக் கொண்டார். பிள்ளையாரின் அனுக்கிரகத்தினாலும் ஆசீர்வாதத்தினாலும் கடந்த பங்குனி மாதம் நடந்தேறிய பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகத்தை அகமகிழ்வுடன் கண்டு களித்தார். தனக்கும் குறைவின்றி, சுற்றியிருந்தோருக்கும் குறை வைக்காமல் வாழ்ந்த, அன்பாலும் பண்பாலும் உருவான எங்கள் குடும்பத்தின் கலங்கரை விளக்கு யாருமே நினைத்திராத கணத்தில் 03.04.2020 அன்று சுகவீனம் அடைந்து , 04.04.2020 காலையில் எம் அனைவரையும் தவிக்க விட்டு இறைவன் திருவடிகளை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிக்கவிட்டு சென்றதேன்!..

அத்தான், நான் உங்களிடம் வந்த பின்புதான் எனக்கு கௌரவமும் மதிப்பும் கிடைத்தது அதற்காக உங்களைத் தேடி எடுத்து எனக்குத் தந்த எனது அப்பா அம்மாவுக்கும், உங்களைப் பெற்ற மாமா அத்தைக்கும் முதலில் என் கண்ணீரை காணிக்கையாக்குகிறேன்.

உங்களின் அன்பில் நான்கு பிள்ளைச் செல்வங்களையும் பெற்று அவர்களை நன்றாக படிப்பித்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து அவர்களுக்கு பாசமான மருமக்களையும் தேர்ந்தெடுத்து, மதிப்புக்குரிய அன்பான சம்பந்திகளையும் பெற்றீர்கள். உங்கள் பேரப்பிள்ளைகளுடன் வயது வித்தியாசமின்றி அவர்களது வயதிற்கு இறங்கி விளையாடினீர்கள், அவர்கள் கேட்காமலேயே விருப்பமறிந்து தேவையான பொருட்களை காலம் தவறாமல் அனுப்பி வைத்தீர்கள்.

சகோதரர்கள், மைத்துனர்கள் , சகலர்கள் எல்லோரையும் வேறுபாடில்லாமல் அன்பு காட்டி அறிவுரைகள் கூறி உதவியும் செய்தீர்கள். பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரையும் உங்கள் பிள்ளைகள் போல் படிப்பில் சாதித்திட அக்கறையுடன் விசாரித்து அவர்களுக்கு புத்திமதியும் சொன்னீர்கள். அயலவர்கள், நண்பர்கள், உற்றார் உறவினர்களிடம் நற்பெயரும் நன்மதிப்பும் பெற்றீர்கள். அதனால்தானே ஊரடங்கு சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதும் உங்கள் இறுதிப் பயணத்தில் எல்லோரும் வந்து உங்களை வழியனுப்பி வைத்தார்கள்.

உங்களைப்போல் ஒருவர் கிடைக்க நான் பெரிய புண்ணியம் செய்திருக்கிறேன். உங்களுடனும் பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் நிறைந்த செல்வாக்கோடும் அன்பாகவும் பாசமாகவும் சந்தோசமாகவும் வாழ்ந்து மனநிறைவடைந்தேன்.

நீங்கள் செய்த புண்ணியத்தின் பலனாக உங்களுக்கு ஒரு வேதனையும் தெரியாமல், உங்களை இறைவன் தன்னிடம் அழைத்து விட்டார். உங்களுக்கு எவ்வளவு சுகயீனங்கள் இருந்தபோதும் அதைவிட என் சுகயீனத்தில்தான் அதிக அக்கறை காட்டி ஒரு குழந்தையைப் போல் கவனித்துக் கொண்டீர்கள். இன்று அதையும் மறந்து நீண்ட உறக்கத்துக்கு சென்றுவிட்டீர்களே.

உவர்மலை விநாயகப்பெருமானின் பாதக்கமலங்களில் சரணடைந்து முக்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
வாழும் வரை உங்கள் நினைவுகளுடன் வாழுவேன்.

அன்பு மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் பண்பும் உருவான அப்பா!

அள்ளி அணைத்தீர்கள், அரவணைத்துக் காத்தீர்கள்,
நல்வழி காட்டினீர்கள் எம் அனைவருக்கும்.
பள்ளியிலும், வெளியிலும் தெரிந்துகொண்ட
அத்தனையையும் ஒன்றாய் எமக்கு சொல்லித் தந்த
ஆசானாய், காவலனாய், அன்பு நிறைந்த தோழனாய்
நீங்கள் எங்களுக்கு.
உழைப்பால் உயர்ந்தீர்கள், உழைப்பதில் வாழவும் கற்றுத்
தந்தீர்கள். உறவுகளை அணைத்தீர்கள், பொறுப்புகளைச்
சுமந்தீர்கள்
எமக்கும் அதைக் கற்றுத் தந்தீர்கள்.
ஐம்பதுக்குமதிக ஆண்டுகளாய் கடமை எமக்கு செய்த
உங்களுக்கு, ஐம்பது வினாடிகள் கூட பணி செய்யமுடியாத
கடனாளிகளானோம் நாம்.
மனதாலும் உடலாலும் எமைச் சுமந்த உங்களின்
நினைவுகளையாவது உயிருள்ளவரை சுமக்க
விரும்புகிறோம்.

பிள்ளைகள் (செல்வம், சுரேஷ், ஜெயம், தங்கா )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு மாமா ...

ஒன்றல்ல.... இரண்டல்ல ....
நீண்ட கால பந்தம்
எம் நினைவுகள் பின்னோக்கிச் செல்ல
மனதிலே எண்ணற்ற நிகழ்வுகள்....
வந்த மருமக்களை "பிள்ளை", "தம்பி" என்றழைத்து,
கூப்பிடும் பொழுதெல்லாம்
எம் பெற்றவரை நினைவில் நிறுத்தியவர்.
கோபம் என்பதன் அர்த்தம் தெரியாதவர்
நேரம் தவறாமையின் அர்த்தம் புரியவைத்தவர்
நாளை என்பது வாழ்க்கையில் இல்லை
இன்றே செய்துமுடி என்று வாழ்ந்து காட்டியவர்.
கனிவாக பேசுவது எப்படி என்று எம் சந்ததிக்கு
எடுத்து காட்டியவர்.
உறவுகள் மட்டுமல்ல அனைவரையும் நேசிக்கும் குணம் என
எத்தனை .... எத்தனை...
நினைவுகள் என்றும் அழிந்து போகா...
நினைவுகளில் என்றும் எங்களுடன் வாழும் எங்கள்
மாமாவிற்கு சமர்ப்பணம்.

மருமக்கள் (சியாமளா, ஜெயந்தி, சுஜாதா, கிரிதரன் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கி தவிக்கிறோம்!!.

அப்பப்பா/அம்மப்பா!. எங்களோடு எப்போதும் அன்பாகவும் அரவணைப்பாகவும் இருப்பார்.
தனது வயதுக்கு மேலாக எப்போதும் உற்சாகமாக இருப்பதுடன், தனது பொன்னான நேரத்தை பிரயோசனமாக கழிப்பார்.
நாங்கள் விளையாடும் போது சிறுவர்களோடு சிறுவராக மாறிவிடுவார், பாடம் படிக்கும் போது நல்ல ஆசானாக பாடம் கற்பிப்பார். எங்கள் மனமறிந்து எங்களுக்கு பிடித்த பொருட்களை இலங்கையிலிருந்து அடிக்கடி அனுப்பி வைத்து மகிழ்வார்.

பேரப்பிள்ளைகள்

பிருத்விராஜ், சுருதிகா, மீருஜன், ரம்யா,
ராகேஷ், சாரங்கன், சாருஜன், சாதனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்திகள் துயரம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.
ஒரு மனிதன் வையகத்தில் பிறந்து எப்படி வாழ்ந்தான்
என்பதற்கு முன் உதாரணமாக திகழ்ந்தவர்
எங்கள் சம்பந்தி திரு. நாகலிங்கம் அவர்கள்.
எல்லோராலும் மதிப்பும், பாராட்டும் பெற்று வாழ்ந்தவர்.
இன்பமலர் எனும் இனியவளைக் கரம்பற்றி
முத்தான மூன்று புத்திரர்களையும் அருமைப் புத்திரி
ஒருவரையும்
பெற்றெடுத்து சீரும் சிறப்புமாக வாழ்ந்துவந்தவர்.
அவர் எங்களை வாய்நிறைய அத்தான் என்றும் தங்கச்சி
என்றும் உரிமையோடு உறவு கொண்டாடும் உள்ளம்
கொண்டவர்.
எம் பிள்ளைகளுக்கு அவர் ஒரு தந்தையாகவே மாறியவர்.
அன்பு, பண்பு, நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
என்பவற்றின்
மொத்த உருவமே எங்கள் சம்பந்திதான்.
அவர் எமக்கு சம்பந்தியாக கிடைத்தது எங்களின் பாக்கியம்.
உங்கள் உருவமும், புன்னகையும் எப்பொழுதும் எங்கள்
மனதில் என்றும் நீங்காதிருக்கும்.
இப்படியானதொரு உன்னத உறவை இழந்து வாடும்
சம்பந்திகள்.

திருமதி. ஜெயசீலி முத்துராஜா,
திருமதி. சுவர்ணலதா தனபாலசிங்கம்,
திரு திருமதி. கந்தையா கமலா
திரு திருமதி. சண்முகலிங்கம் செல்வராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு சீனிமாமா!!.

சிறுவயது முதலே உடன்பிறவா சகோதரன் போல் ஆனீர்...
வாழ்வில் எனை பாதுகாத்து "பிள்ளை பிள்ளை" என்று
சகோதரியாய் பாசம் பொழிந்தீர்...
என் திருமணத்தின் பின் என்னவருக்கும் உற்ற நண்பன் போல்
உறவினர் ஆனீர்...
பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் முறைதாண்டி அன்புவழி
கொண்டு "சீனிமாமா" என்றே அழைத்தனர்...
எல்லோரையும் உம் பிள்ளைகள் போல் விழுமியங்களும்
நற்பழக்கவழக்கங்களும் கூறி வாழ்வில் வளமாக வாழ
நற்புத்தி புகட்டினீர்...
ஒவ்வொரு விழாவிலும் எம் அனைவரையும் ஒன்றுகூட கண்டு
மகிழ்ந்தீர்...
உம் இறுதி நிகழ்வில் எம்மால் பங்காற்ற முடியா துயருடன்
வாடுகிறோம்...
இன்று நீங்கள் எம்முடன் இல்லாவிடினும் என்றும் எம்
நினைவில் வாழ்வீர்கள் எங்கள் அன்பு சீனிமாமாவாக.....!

இராசபாக்கியம் பாலசிங்கம் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் கொண்டோம்!.

அன்பும் பண்பும் கொண்டவர் நீங்கள்
அண்ணாவின் பிள்ளைகள் என எம்மிடம்
அதிக அக்கறை கொண்டவரும் நீங்களே
அடிக்கடி வந்து அன்புடன் நலம் விசாரித்து
நல்வழி காட்டியவரும் நீங்களே
இன்று,
இவை அனைத்தும் இல்லாது போய்விட்டதே இளையையா...
துயர் கொண்டோம் இளையையா....

திருமதி செல்லம்மா கந்தசாமி,
பரராஜசிங்கம் , ஸ்ரீதரன், ரஜனி, ரமணி குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனிமாமா!.

எங்கள் மீது கொண்டிருந்த அளவில்லா அன்பும் பாசமும் அளவிட்டு கூற இயலாது வேதனையில் தவிக்கின்றோம். உங்கள் அன்பு அக்கா மீதும் அவர்கள் பிள்ளைகளான எங்கள் எல்லோர் மீதும் மாமா நீங்கள் வைத்திருந்த அன்பும் பாசமும் அக்கறையும் வார்த்தைகளால் சொல்ல முடியாது வாடுகின்றோம். சீனிமாமா உங்கள் ஆத்மசாந்தி வேண்டி நித்தமும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

திருமதி. இராசம்மா மயில்வாகனம்,
சறோஜினி தேவி, திசைவீரசிங்கம், மல்லிகாதேவி,
பிறேமாவதி, உதயறாணி, அபீதகுஷாம்பிகை குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் துயரம்!.

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்தீர்களே..
தன் பிள்ளைகட்கு நிகராக எமைக் காத்து வளர்த்தீர்களே..
நன்மதிப்பும் கல்வியுமே நனிசிறந்த அணிகளென
இன்புற்று நாம் வாழ நல்வழிகள் காட்டினீர்களே..
சகோதர பாசத்துக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தீர்களே ..
பழிபாவம் எமைத்தீண்டாமல் காத்த எங்கள் இளையையா..
நீங்கள் துன்பத்தில் எமையாழ்த்தி தொலை தூரம்
சென்றதேனோ..
இளையையா என்றழைக்க யாருள்ளார் எமக்கிங்கே
சிலையாகி போனோமே உங்கள் சிரித்த முகம்காணா
பிழையென்ன நாம் செய்தோம் எமை பிரிந்து போவதற்கு
நெஞ்சமெலாம் உங்கள் நினைவுதான் எப்போதுமே...

திருமதி. செல்லம்மப பொன்னுசாமி,
வசந்தா, வனிதா, ரவி, சாந்தா, சீதா, கோபு, லதா
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையயா!..

தந்தைக்கு பின் தந்தையாய்
தாமாக முன்வந்து தன்பணி செய்தவரே.......
தரணியிலே நீர் வாழ்ந்தீர் தாமரை முகத்தோடு.....
தம்பி அவர் செல்வங்கள் தன்மானத்துடன் வாழ வேண்டி
தன் செல்வங்களாய் சிரத்தையுடன் பார்த்தீரே.....
சிரித்த முகமும் கண்டிப்பான பேச்சும்
தர்மத்தின் வழியும் உங்களில் கண்டோமே....
கரணவாய்க்கு நீங்கள் வந்தால்
கூடவரும் சிரிப்புச் சத்தம் முன்னாலே.
சீ சீ என்று சொல்லி சிக்கனத்தை கற்றுத்தந்தீர்களே..
இளையயா எனும் சொல்லில் எம்மோடு எம் பிள்ளைகளும்
உங்களிடம் இரண்டறக் கலந்தார்கள்
பேரன் இல்லை என்ற குறைதீர்த்தீர்களே..
கோயில் பணிசெய்து வந்த நீங்கள் கொஞ்சம் உண்டு உறங்க முன்னே
தெய்வமே முன்வந்து உங்கள் கரம் பிடித்ததோ..
நிம்மதியாய் உறங்குகள்!
என்றும் உங்கள் நினைவுடன் நாங்கள்

திருமதி. இராஜேஸ்வரி பரமசாமி,
பவானி, தயா, முகுந்தன், இளங்கீரன் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனியப்பாவே !

அனைத்து நற்குணங்களையும் தன்னகத்தே கொண்ட
எங்கள் பாசத்துக்குரிய சீனியப்பாவே !
நீங்கள் எங்களை அன்போடும், கனிவோடும்
அழைக்கும் உங்களது குரல் இப்போதும் எங்களது
செவிகளில் ஒலித்த வண்ணம்தான் இருக்கிறது
ஆதலால்தான் கூறுகிறோம் உங்களது
உடல்மட்டும் தான் எம்மை விட்டு பிரிந்துள்ளது
உங்களது அன்பான நினைவலைகள் எப்போதும்
எங்களை விட்டு பிரியாது .... பிரியவில்லை ....
உங்களது ஆத்மா இறைவனடி சேர்ந்து சாந்தியடைய
பிரார்த்தித்து நிற்கும்

திருமதி. கமலாதேவி சுந்தரலிங்கம்,
சுதா, பாபு, சிறி, பரணி, வாசுகி, பிரதீப் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் தாங்க முடியவில்லையே சீனியப்பா.....

உயிரையும் உணர்வையும் ஒழுக்கத்தையும் பண்பையும்
பாசத்தையும் ஊட்டி நின்றீரே!
மறையாத இனிய நினைவுகளை தந்து எங்கு சென்று
மறைந்து விட்டீர்கள் சீனியப்பா !
ஆசைமகளாய் பிறக்காத போதும் இறுதிவரை
அன்பு மகளாய் பார்த்தீரே!
என் பிள்ளைகளுக்கு ஒரு ஆசானாய் இருந்தீரே!
அலையாய் வந்தது தங்களை இறைவன் அழைத்துச்சென்ற
செய்தி
வாழ்ந்த காலங்களில் பெரும் துயர் தாங்கி
உருகும் மெழுகாய் எமக்காய் இருந்தீரே!
இனி உங்களை எங்கே காண்போம் சீனியப்பா
கண்ணீர் துளிகளால் ஆராதனை செய்கிறோம்.

திருமதி. ஜெயமலர் சித்திவிநாயகம்,
ஜெயசங்கர், ஜெயராஜ், ஜெயவதனி குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனியப்பா!.

அன்பின் உருவான சீனியப்பா ஆறுதில்லை உம் இழப்பு
உருவம் தந்தது என் தந்தை உருவாக்கி விட்டது உம் வளர்ப்பு
பெற்றது நான்கு பிள்ளை பெறாது பெற்றேன் உமை
தந்தையாக
ஆறுதில்லை மனம் எனக்கு அப்பா உன் குரல் கேட்க வேண்டும்
எனக்கு

கண் தேடுதிங்கே உருவம்தனை கண்ணீர் மட்டும் விம்பமாக!!
அப்பன் என்ற வார்த்தையிலே அன்போ பல கோடி
அத்தனையும் இழந்து விட்டோம் யார் தருவார் இனி எமக்கு
எத்தனை தான் நினைவலைகள் எழுந்தாலும் எம் மனதில்

கனவலையாய் இன்றெமக்கு காலனவன் கலைத்தானோ
தூக்கி விட்டே பழகி விட்டீர் தூய்மையான மனதோடு
அன்புக்கு உருவிருந்து பண்புக்கும் உருவிருந்து
பாரினிலே வாழ்த்திருந்தால் பெற்றிருக்கும் உருவம் அது
சீனியப்பா.. சீனியப்பா..

கடைசி வரை கடமை செய்து கழித்து விட்டீர் காலம் தனை
கடைசியாக கடமைதனை செய்ய வில்லை நாம் உமக்க
கனக்குது மனமெல்லாம் கண் வடிக்குது கரு மழையாய்
கழிப்போம் எம் காலம் தனை கனவிலும் உம் நினைவோடு!

திருமதி. தேம்பாமலர் சண்முகம்,
சுகந்தினி, காண்டீபன், தயாளினி குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புக்கு இனிய சீனியப்பா ......

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் கனகாலம் இருப்பீர்கள்.

திரு திருமதி. நவரத்தினம் இரஞ்சிதமலர்,
துளசி, ரமேஷ், முரளீ, பிரியா குடும்பத்தினர்

## மறக்குமா மனது!!

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கை களைவதாம் நட்பு(உறவு)
எனது குடும்பத்தில் துன்பதுயர் வந்தபோது
அருகிலிருந்து ஆற்றுப்படுத்திய எமது அத்தானே
மைத்துணியாயிருந்தாலும் மகள் போல பார்த்து
வளர்த்தெடுத்த எங்கள் தெய்வமே
திடீரென சொல்லாமலே சென்றதேனோ......

திரு திருமதி. கிரீதரகோபாலன் புனிதமலர்
மலர்விழி , வேந்தன் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணையும் மக்களையும் நேசித்த மகத்தான மனிதர் நாகலிங்கம்

நட்புக்கு இலக்கணமாய் அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் வாழ்ந்த மகத்தான மனிதர் நாகலிங்கம் என்வாழ்வில் புகுந்தது 1963 ம் ஆண்டுதான் திருகோணமலையில் சிவன்கோவிலடியில் உள்ள 16 / 23 சிவபுரி வீதியில் அமைந்திருந்த என் சகோதரி வீட்டில் நானும் அண்ணர் நாகலிங்கம், அவரது துணைவியார் மலர், சகோதரன் கந்தசாமி அண்ணர் ஆகியோர் ஒரே குடும்பம்போல் குடியிருக்க ஆரம்பித்தோம்.

1965ம் ஆண்டு திருமலை நகரசபைத் தேர்தலில் 9ம் வட்டாரத்தில் எனது வெற்றிக்கு அண்ணர் நாகலிங்கம் குடும்பத்தினரின் கடின உழைப்பே காரணமாகும். அவரும் சகோதரி மலரும் அதற்காக அல்லும் பகலும் உழைத்ததை என்னால் மறக்க முடியாது.

1968ம் ஆண்டு உவர்மலை மத்திய வீதியில் அமைந்திருந்த அரசுக்குச் சொந்தமான காணியை தமிழ் மக்களின் குடியேற்றத்திற்காகப் பயன்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தோம். அதற்கான கோரிக்கையை முன்வைத்தும் அரசு சம்மதிக்கவில்லை. அதற்கான ஒரு போராட்டத்தை ஆரம்பித்தோம். ஒருவருடமாகத் தொடர்ந்த அந்தப் போராட்டத்தில் என்னோடு தோளோடு தோள்நின்று நிழல்போல இறுதிவரை போராடியவர் இந்த நாகலிங்க அண்ணர்தான். அந்தவிடயத்தில் இறுதியாக தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வநாயகம் அவர்கள் அப்போதைய பிரதமமந்திரி டட்லி சேனநாயகாவுடன் இறுக்கமாகப் பேசி அந்த நிலத்தை எமக்குப் பெற்றுத் தந்தார். அதேநிலத்திலேயே நானும் அண்ணர் நாகலிங்கமும் இன்னும் பலரும் வீடு அமைத்துக் குடியேறி வாழ்ந்து வந்தோம்.

அந்தக் குடியேற்றத் திட்டத்திலும் அயலிலிருந்த கோணேசபுரப் பகுதியிலும் வாழ்ந்த மக்களின் பிள்ளைகள் படிப்பதற்கு தொலைதூரப் பாடசாலைகளுக்குச் செல்லவேண்டியிருந்தது. அந்தக் குறையைப் போக்க இந்த நாகலிங்க அண்ணரும் அமரர் விநாயகமூர்த்தியும் அமரர் வேலுப்பிள்ளையும் எடுத்துக்கொண்ட விடாமுயற்சியால் உவர்மலையிலேயே "உவர்மலை தமிழ் வித்தியாலயம்" என்ற பாடசாலையை அரசகாணியிலேயே உருவாக்கி சிறந்தமுறையில் நடாத்தினார்கள். அவர்களின் நல்லெண்ண முயற்சி காரணமாக அந்தப் பாடசாலை இப்போது மகாவித்தியாலயமாக ஆயிரக்கணக்கான பிள்ளைகள் உயர்கல்வி பயிலும் நிலையமாக வளர்ந்து நிற்கின்றது.

பின்னாளில் அங்கு ஏற்பட்ட எம்மினத்தின் மண்மீட்புப் போர் காரணமாக எனக்கும் என் குடும்பத்திற்கும் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் நாங்கள் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வருகின்றோம். ஆனால் அந்த மண்ணின் மீது கொண்ட பற்றுதலால் அத்தனை இடர்களையும் தாங்கிக்கொண்டு நாகலிங்கண்ணரும் அவரது பல உறவினர்களும் இன்றுவரை அங்கேயே வாழ்ந்துவருவதை நினைக்கும்போது மெய்சிலிர்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் சின்னமாக பண்பின் இருப்பிடமாக பரிசுத்தமான உள்ளத்தின் உதாரணமாக நட்பின் அடையாளமாக வாழ்ந்த உத்தமர் நாகலிங்கண்ணர் என்றும் எம்மிதயத்தில் குடியிருப்பார்.

"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை"

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாய்மொழிக்கிணங்க வாழ்ந்த அந்தப் பெருமகன் இன்று எம்மோடுஇல்லை என்று நினைக்கும்போது நெஞ்சு பொருமுகின்றது. ஆயினும் வையத்தில் வாழ்வாங்கு
வாழ்ந்தவர் வானுறையும் தெய்வத்தாளில் நிலைபெறுவார் என்று தேறுதல் அடைந்து இறைவனைத் துதிப்போம். அன்னாரின் ஆன்மா சாந்தி பெறவும் குடும்பத்தவர் உறவினர் தேறுதல் அடையவும் இறைவன் கருணை கிடைப்பதாக.

இவ்வண்ணம்
அவருக்காக இறைவனை இறைஞ்சும்
வீர சுப்ரமணியம் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். சி. க. நாகலிங்கமும் – பொதுப்பணியும்

யாழ்ப்பாணம் கரணவாயை பிறப்பிடமாகவும் – வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினருக்கு ஐந்தாவது மகனாக இந்த மண்ணில் வந்து உதித்தவர் தான் அமரர்.சி.க.நாகலிங்கம் அவர்கள்.

இவர் தனது கல்வியை யாழ்ப்பாணம் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியிலும் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியிலும் முடித்துக் கொண்டு இன்பமலர் என்பவரை 1963ம் ஆண்டு திருமணம் செய்து இல்வாழ்க்கையில் இணைந்தார்.

திருக்கோணமலை துறைமுக அதிகார சபையில் பிரதம எழுதுவினைஞராக வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொண்ட திரு.சி.க.நாகலிங்கம் அவர்கள் திருக்கோணமலை சிவன் கோவிலடியில் துணைவியாரோடு வந்து வாழ்ந்திருந்தார்.

பின்னர் திருக்கோணமலை துறைமுக அதிகாரசபை ஊழியர்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் திருக்கோணமலை உவர்மலைப் பகுதியில் வழங்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தில் காணியைப் பெற்றுக் கொண்டு 1969ம் ஆண்டில் உவர்மலையில் குடியமர்ந்தார்.

சுபாவத்திலேயே எல்லோருடனும் அன்பாகவும் – ஆதரவாகவும் – பண்பாகவும் பழகும் அமரர்.சி.க.நாகலிங்கம் அவர்கள் உவர்மலைப் பகுதியில் குடியேறியது முதல் அப்பகுதி குடியேற்றத்திட்ட மக்களின் வாழ்வாதாரத்திலும் – வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தி உழைத்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் காலகட்டத்தில் திருக்கோணமலை உவர்மலையில் அமைந்த துறைமுக அபிவிருத்தி அதிகார சபை வீடமைப்புத் திட்டத்தின் ஒரு காணிக்குள் அமெரிக்கத் துறவியான சுவாமி தந்திரதேவா அவர்களின் அனுசரணையுடனும் உவர்மலை வாழ் இந்து மக்களின் உதவியுடனும் ஓர் விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது.

ஆரம்ப காலத்தில் திரு.வி.நமசிவாயம், திரு.வி.போதலிங்கம், சுவாமி தந்திரதேவா அவர்களுடனும் இணைந்து அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தை அமைக்க அமரர்.சி.க.நாகலிங்கம் அவர்களும் அயராது உழைத்துப் பாடுபட்டு ஆலயம் அமையவும் உறுதுணையாக இருந்துள்ளார்.

பின்னர் ஆலய பொதுச்சபையில் ஆரம்பகாலம் முதல் அமரராகும் வரை பொதுச்சபை உறுப்பினராக இருந்து வந்ததுடன், பல ஆண்டுகள் செயலவை உறுப்பினராகவும், ஆலயத்தின் 2000ம், 2001ம், 2002ம், 2003ம், 2005ம், 2006ம் ஆண்டுகள் ஆகிய ஆறு வருடங்கள் தொடர்ச்சியாக ஆலய பரிபாலன சபையின் தலைவராகவும் இருந்து வழிகாட்டி, வழிநடாத்தியும் சென்றுள்ளார்.

ஆலயத்தின் வளர்ச்சியில் கண்ணும் - கருத்துமாக இருந்த அமரர்.சி.க.நாகலிங்கம் அவர்கள் அவ்வப்போது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கி எம்மை வழிநடாத்திச் சென்றுள்ளார்.

அண்மைக் காலத்தில்கூட 2017ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்ட ஆலயம் நிதிப் பற்றாக்குறை காரணமாக கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் முற்றுப்பெறாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த காலத்தில் செயலவையைக் கூட்டிக் கதைக்கும்படி அடிக்கடி வற்புறுத்தியும், நீதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளையும் செயலவைக்கு எடுத்துக்கூறி கடந்த மாதம் (பங்குனி 2020) நடைபெற்ற விநாயகப் பெருமானின் மகாகும்பாபிஷேகம் அமைதியாகவும் - சிறப்பாகவும் அமைய அரும்பாடுபாட்டு, அக் கும்பாபிஷேக நிகழ்வுகளில் குடும்பசமேதராக கலந்தும் சிறப்பித்து எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகம் நிறைவாக நடைபெற அயராது உழைத்துள்ளார்.

அதுமட்டுமல்ல தினமும் காலையில் நடைபெறும் நித்திய பூசைகளுக்கு தவறாமல் வருகைதந்து, கலந்து கொண்டு தன்னால் இயன்ற சரீர உதவிகளையும் செய்து வந்துள்ளார்.

அமரர்.சி.க.நாகலிங்கம் அவர்களின் மறைவு, குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் ஈடுசெய்ய முடியாததாக இருக்கும் அதேவேளை, அயலவர்களும், நாமும் விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சியில் ஆர்வமும் - அக்கறையும் கொண்ட ஒருவரை இழந்தும் நிற்கின்றோம்.

அன்னார் தன்னுடைய இறுதிக் காலத்தில் விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகத்தைக் கண்டு மகிழ்ந்து சென்றது, எமக்கு ஓரளவு மன ஆறுதலைத் தருவதுடன், அமரரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதங்களையும் பணிகின்றோம்.

நல்லையா சிறிஸ்கந்தராசா,
செயலாளர்,
அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயம், உவர்மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். திரு. க. நாகலிங்கம் அவர்களைப் பற்றி அவரது நண்பர் என்ற ரீதியில் சில வார்த்தைகள் கூறலாம் என்று விளைகின்றேன்.

1963 ஆம் ஆண்டு நான் தொழில் புரியும் இடத்தில் அமரர். சி.க. நாகலிங்கம் அவர்களைச் சந்தித்தேன். அன்று தொட்டு அவர் காலமாகும் வரை நாங்கள் நண்பர்களாகவே இருந்தோம். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கருத்து இருவரையும் ஒன்று சேர்த்து வைத்துள்ளது. எமது தொழில் ஸ்தாபனமாகிய வடிவேல் அன் பிரதர்ஸ் இல் இணைந்த நாங்கள் தொழிலோடு மக்களுக்கும் உதவி புரிவதில் ஆர்வமாக இருந்தோம். இதன் காரணமாக முக்கியமான சில சங்கங்களில் அங்கத்தவர்களாக சேர்ந்து கொண்டோம்.

நாம் முதன் முதலாக சேர்ந்த சங்கம் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம். அரசாங்கம் கொம்பனிகளைப் பொறுப்பேற்று அதற்கு துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனம் எனப் பெயரிட்டது. இவ்விடயத்திலும் அமரர். சி.க. நாகலிங்கம் அவர்கள் முழு அர்ப்பணிப்புடன் பாடுபட்டார். இச்சங்கத்தில் அவர் பொருளாளராக செயற்பட்டார். மேலும் அரசாங்கம் இன்னும் இரு ஸ்தாபனங்களை இணைத்து இலங்கை துறைமுக அதிகாரசபை என உருவாக்கப்பட்டது.

சிறிது காலம் செல்ல என்னைத் தலைவராக தெரிவு செய்தார்கள். அதனால் எங்கள் இருவரது தொடர்புகள் மேலும் நெருக்கமானது. மேற்படி மாற்றங்களினால் எங்கள் இருவருக்குமிடையில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. மேற்படி ஸ்தாபனத்தில் பல பதவிகளை வகித்த அமரர். சி.க. நாகலிங்கம் அவர்கள் இறுதியாக நிதிப் பிரிவில் முதல்த் தர அலுவலகராக பணியாற்றி 1998 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிலையில் எமது உவர்மலைக் கிராமத்திற்கு ஒரு பாடசாலை தேவை என உவர்மலை அபிவிருத்திச் சங்கத்தினால் அரசிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாக மக்களினால் 70' x 20' அளவில் கொடுத்த மண்டபத்தை ஏற்று 1978 ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையில் முதலாவது இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்டது. எங்கள் பாடசாலையில் அப்போது விளையாட்டு மைதானம் இல்லாமையினால் பாடசாலையிலேயே முதல் விளையாட்டுப் போட்டி நடாத்த வேண்டுமென்பதற்காக மலைகளையும், கற்பாறைகளையும் கொண்டிருந்த இடத்தை சி.க. நாகலிங்கம் மற்றும் அமரர்களான E. சுந்தரமூர்த்தி, J. A. கோமஸ், M. வில்பேட் போன்றவர்களுடன் இணைந்து விளையாட்டு மைதானமாக மாற்றியமைத்தமை இன்றும் என் கண் முன் நிழலாடிக் கொண்டிருக்கின்றது. இதன் முழு விபரமும் "பாடசாலையின் ஆரம்பகால வரலாறு" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

இது இவ்வாறிருக்க நாங்கள் தற்பொழுது வசித்து வரும் காணிகளுக்காக அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அமரர். மாணிக்கராசா, பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் காணிகளை எடுத்து தருவதற்காக எங்களை ஒரு சங்கத்தை ஆரம்பிக்குமாறு வேண்டியதற்கிணங்க நாங்கள் ஒரு சங்கத்தை ஆரம்பித்து அச்சங்கத்திற்கு முறைமுக தொழிலாளர் வீடமைப்புச் சங்கம் எனப் பெயரிட்டோம். அதிலும் அமரர். சி.க. நாகலிங்கம் அவர்கள் பொருளாளராக சபையினால் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் எமது காணிகளைப் பெறுவதற்கும் காணிகளை திருத்துவதற்கும் அத்துடன் அக் காணிகளுக்கான உறுதிகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் அன்னார் எம்முடன் இணைந்து அரும்பாடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988 ஆம் ஆண்டு பிள்ளையார் ஆலயத்தை அமைத்திருந்தோம். இவ் ஆலயத்தின் பரிபாலன சபையில் அமரர். சி.க. நாகலிங்கம் அவர்கள் தலைவராக இருந்து ஆலயத்தை அபிவிருத்தி செய்தார். இதன்பின் சிறிது காலம் சிங்கப்பூரில் வசித்து விட்டு தற்போதைய பரிபாலன சபையில் நிர்வாக சபை அங்கத்தவராக செயற்பட்டார். இதன் முழு விபரமும் "உவர்மலை ஸ்ரீ விநாயகர் ஆலய ஆரம்பகால வரலாறு" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

விஸ்வநாத சிவன் கோயிலில் நடைபெறுகின்ற திருவிழாக்களில் 3ஆம் திருவிழாவினையும் உவர்மலை மக்களுக்காக பொறுப்பேற்று அன்னார் பல ஆண்டுகளாக சிறப்பாக முன்னின்று நடாத்தியுள்ளார்.

இது இவ்வாறிருக்க இதில் ஆச்சரியம் என்னவென்றால் உவர்மலை ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் எண்ணெய்க்காப்பு 2020.03.21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்று, குப்பாபிஷேகம் 2020.03.22 ஆம் திகதி நடைபெற்றது. இவை நன்றாக முடிந்த பின் தான் எனது நெருங்கிய நண்பரை இறைவன் தன்னுடன் 2020.04.04 ஆம் திகதி சனிக்கிழமை இணைத்துக் கொண்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நா. நாகேஸ்வரன்
முன்னாள் தலைவர், இலங்கைத் துறைமுக தொழிலாளர் வீடமைப்புச் சங்கம்.
முன்னாள் செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், உவர்மலை விவேகானந்தா கல்லூரி.
முன்னாள் தலைவர், ஸ்ரீ விநாயகர் ஆலயம், உவர்மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் உருண்டோடல்கள்...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண பந்தத்தில்...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகள்..







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 1938 | 2020 |
| 11 | 04 |
| 30 | 04 |



## அமரர்.கணபதிப்பிள்ளை நாகலிங்கம்

யாழ்ப்பாணம் கரணவாயை பிறப்பிடமாகவும் திருகோணமலை உவர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட (அமரர்)கணபதிப்பிள்ளை நாகலிங்கம் (04.04.2020) அன்று சிவபதமடைந்தார். (ஓய்வுபெற்ற இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதம லிகிதர்) அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லரெட்ணம் மகேஸ்வரியம்மாவின் அன்பு மருமகனும், இன்பமலரின் அன்புக்கணவரும், (அமரர்)கந்தசாமி, (அமரர்)பொன்னுச்சாமி, (அமரர்)பரமசாமி, திருமதி.ராசம்மா ஆகியோரின் சகோதரரும், ஜெயமலர், தேம்பாமலர், ரஞ்சிதமலர், புனிதமலர் ஆகியோரின் மைத்துனரும், ரட்ணலிங்கம், ரமணலிங்கம் (அவுஸ்ரேலியா), ஜெயலிங்கம் (அவுஸ்ரேலியா) இன்பதர்ஷினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சியாமளா, ஜெயந்தி, சுஜாதா, கிரிதரனின் அன்பு மாமனாரும், பிருத்வி ராஜ், ஸ்ருதி, மிருஜன், ரம்மியா, சாரங்கன், ராகேஷ், சாருஜன், சாதனா ஆகியோரின் பேரனுமாவார்.

**அன்னாரின் ஈமைக்கிரியைகள் (05.04.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு அவரது இல்லத்திலிருந்து திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்
குடும்பத்தின
T.P no 026 2220 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்ப தலைவர் அமரர். கணபதிப்பிள்ளை நாகலிங்கம் அவர்களின் உயிர் நீங்கிய செய்தி கேட்டு, ஓடி வந்து எம்மோடு துணை நின்று சகல காரியங்களிலும் நிழலாய் இருந்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி வலையத்தளம் மூலமாக ஆறுதல் வார்த்தைகள் கூறி எம் அன்னாரின் துக்கத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு எங்கள் இதயத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்தவர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றென்றும் நன்றியுடன்
குடும்பத்தினர்

நன்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org